நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,

நாள்.22.08.2024.

**மன்றக்கூட்ட அறிவிப்பு**

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாள்.30.08.2024, வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்றக் கூடத்தில் வைத்து நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

நகர்மன்ற தலைவர்,

புளியங்குடி நகராட்சி

**அவசரக் கூட்டம்**

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| | 494 | **பொருள்.1**<br>புளியங்குடி நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜுலை–2024 ம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 495 | **பொருள்.2**<br>புளியங்குடி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஒன்பது ஆண்டு குத்தகை இனங்களான மாத வாடகை கடைகளை குடும்ப சூழ்நிலை காரணமாக நடத்த முடியாமல் குத்தகைதாரர்கள் அலுவலகத்தில் ஒப்படைத்து விட்டனர்.<br><br>**வ.எண்.** — **குத்தகை இனங்கள்**<br>1 — புளியங்குடி பேருந்துநிலைய மேற்புற கடை எண்.5<br>2 — புளியங்குடி பேருந்துநிலைய கடை எண்.16<br>3 — புளியங்குடி பேருந்துநிலைய கடை எண்.18<br>4 — சிந்தாமணி பேருந்து நிலைய கடை எண்.1<br><br>மேற்கண்ட கடைகளை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்கண்ட கடையை நடத்தி வந்த குத்தகைதாரர் புளியங்குடி பேருந்து நிலைய மேற்புற கடை எண்.5–யை திரு.M.முருகேசன் என்பவருக்கும், புளியங்குடி பேருந்து நிலைய கடை எண்.16–யை திரு.ஜெயபாலன் என்பவருக்கும், புளியங்குடி பேருந்து நிலைய கடை எண்.18–யை திருமதி.M.முத்துலட்சுமி மற்றும் சிந்தாமணி பேருந்துநிலைய கடை எண்.1–யை திரு.R.சவரிமுத்து என்பவருக்கும் குத்தகை முன்வைப்புத்தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1711/2023/அ1) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 496 | **பொருள்.3**<br>புளியங்குடி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி வாகனம் பொது சுகாதாரப்பிரிவு TN-79-F-6123, TN-79-F-6126, TN-79-F-6172 ஆகிய மூன்று வாகனங்களுக்கு தகுதிச்சான்று பெற சங்கரன்கோவில் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டிய தொகை ரூ.13,620/-யை (4540x3) பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 497 | **பொருள்.4**<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.<br>**"சாலையோரவியாபாரிகளுக்கானத்திட்டம் (Street Vendors Welfare)**<br>தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூகபாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்.<br>இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள்2015-ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 359 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை-28 அவர்களின்கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 | அனுமதிக்கப்பட்டது |

உறுப்பினர்கள்அடங்குவர்.

| |
|---|
| நகராட்சி ஆணையர் |
| மருத்துவ அலுவலர் |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்துகாவல்அலுவலர்உள்பட) |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பி ன்பிரதிநிதிகள் |
| குடியிருப்போர் நலச் சங்க பிரதிநிதிகள் |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமன்ம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 359 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) | ஆதி திராவிடர் | |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | |
| (3) | மகளிர் | |
| (4) | மாற்றுத்திறனாளி | |
| (5) | சிறுபான்மையினர் | |
| (6) | பொது | |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3)–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**தேர்தல்நடைபெறும்இடம் : – நகராட்சிஅலுவலகம், புளியங்குடி**

| **தேர்தல்விவரப்பட்டியல்** | | **நாள்** | **நேரம்** |
|---|---|---|---|
| தேர்தல் அறிவிக்கை வெளியிடுதல் | – – | 03.09.24 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | – – | 17.09.24 | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை |
| வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | – – | 23.09.24 | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் பரிசீலணை | – – | 24.09.24 | காலை 11 மணி முதல் |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுதல்</td><td>–<br>–</td><td>25.09.24</td><td>பிற்பகல் 3 மணி வரை</td></tr>
<tr><td>வாக்குப்பதிவு நடைபெறும் நாள்</td><td>–<br>–</td><td>03.10.24</td><td>காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை</td></tr>
<tr><td>வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள்</td><td>–<br>–</td><td>03.10.24</td><td>மாலை 6 மணிக்கு நடைபெறும்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.2588/2009/எப்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>498</td>
<td>பொருள்.5<br>
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.141/2024/ஆ4, நாள்.10.06.2024–ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.047/2024/சி2, நாள்.22.05.2024–ம் தேதிய கடித்தில் குறிப்பிட்டுள்ளபடி 2024–2025 ஆம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வருடாடந்திர கட்டணத் தொகை ரூ.30,000/–யை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1478/2014/சி1)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>499</td>
<td>பொருள்.6<br>
புளியங்குடி நகராட்சி பகுதி 4/7, விநாயகர் கோவில் தெரு, சிந்தாமணியில் வசித்து வரும் திருமதி.முப்புடாதி, க/பெ.கருப்பசாமி என்பவர் நகராட்சியின் அனுமதி பெறாமல் மின்மோட்டார் பயன்படுத்தி கைத்தறி நெசவு செய்து வருவதாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.W.P(MD)No.22884 of 2018–ன்படி புளியங்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கிற்கு அரசு வழக்கறிஞர் திரு.ராஜராஜன் அவர்கள் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டு வழக்கினை நடத்திட வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அரசு வழக்கறிஞர் திரு.ராஜராஜன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4228/2018/எச்1)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>500</td>
<td>பொருள்.7<br>
புளியங்குடி நகராட்சி பகுதியில் உள்ள</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

வரிவிதிப்புதாரர்களுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.97, நாள்.12.07.2007-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.748/2008/குவ2, நாள்.21.09.2009-ன்படியும் ஒவ்வொரு வருடமும் புளியங்குடி நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் முந்தைய ஆண்டில் வசூலிக்கப்படும் தொகையினை விட கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணத் தொகை 5 சதவீதம் வசூலிக்கவும், மேற்படி கட்டணத்துடன் மேற்பார்வை கட்டணம் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சாலை பராமரிப்பு கட்டணத்திலிருந்து 25 சதவீதம் சேர்த்து வசூலிக்கவும், அதனடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை பராமரிப்பு கட்டணங்களை புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் நிகழ்வுகளில் வசூலிக்கவும் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.200/- வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1080/2003/இ2)

| வ. எண் | சாலையின் விபரம் | 2022-2023 ஆம் ஆண்டுக்கு வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை பராமரிப்பு கட்டணம் | | 2023-2024 ஆம் ஆண்டுக்கு வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை பராமரிப்பு கட்டணம் | | 2024-2025 ஆம் ஆண்டுக்கு வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை பராமரிப்பு கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 0-30 மீட்டர் வரை | 30-90 மீட்டர் வரை | 0-30 மீட்டர் வரை | 30-90 மீட்டர் வரை | 0-30 மீட்டர் வரை | 30-90 மீட்டர் வரை |
| 1 | தார்சாலை | 4241 | 5371 | 4453 | 5640 | 4676 | 5922 |
| 2 | மேற்பார்வை கட்டணம் 25% | 1060 | 1343 | 1113 | 1410 | 1169 | 1481 |
| 3 | சிமெண்ட் சாலை (ம) பேவர்பிளாக் சாலை | 4901 | 6635 | 5146 | 6967 | 5403 | 7315 |
| 4 | மேற்பார்வை கட்டணம் 25% | 1225 | 1659 | 1287 | 1742 | 1351 | 1829 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

501

**பொருள்.8**

இந்நகராட்சி ஒப்பந்தகார நிறுவனம் CITY TOP SOLUTIONS இந்நகராட்சியில் பணி மேற்கொள்ள செலுத்தி பணிகிடைக்காததால் தான் செலுத்திய முன் வைப்புத்தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். அவை பின்வருமாறு காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு 3401001–ல் கீழ்க்கண்டவாறு இடம் பெற்று உள்ளது. (ந.க.எண்.3016/2023/இ1)

| S. No | Deposit Register | | Voucher No. & Date | Contractor Name | Narration | Voucher Amount |
|---|---|---|---|---|---|---|
| | Page No. | S. No | | | | |
| 1 | 65 | 125 | 142/01/2/18 - 19/0007732 - | CITY TOP SOLUTIONS | SUPPLY AND FITTINGS FOR SURVILANCE CAMERA AT PULIANGUDI MUNICIPALITY SOURRANDING WORK AT TENDER DEPOSIT | 6540 |
| 2 | 67 | 170 | 142/01/2/18 - 19/0015469 - | CITY TOP SOLUTIONS | SUPPLY AND FIXING CCTV & 40 WATTS HORN SPEAKER AT PULIANGUDI BUS STAND WORK AT TENDER DEPOSIT | 5200 |
| 3 | 77 | 225 | 142/01/1/19 - 20/0011768 | CITY TOP SOLUTIONS | CCTV CAMERA 12 NOS | 4600 |
| 4 | 82 | 377 | 142/01/3/19 - 20/0021714 | CITY TOP SOLUTIONS | SUPPLY AND FIXING OF CCTV CAMARA X 19.5 LCD TV IN AMMAU NAVAGA | 3200 |

அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td>M AND<br>ISP<br>TOILET</td><td></td></tr>
<tr><td></td><td colspan="5">Total</td><td>19540</td></tr>
</table>
மேற்கண்டுள்ள பட்டியல் பிரகாரம் முன்வைப்புத் தொகை ரூ.19,540/- வைப்புத்தொகை பதிவேடு 3401001-ல் காலங்கடந்த வைப்புத்தொகையாக இடம் பெற்று உள்ளன.<br>
எனவே மேற்கண்டுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.19,540/-யை CITY TOP SOLUTION நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>
(ந.க.எண்.3016/2023/B4)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>502</td>
<td>
பொருள்.9<br>
பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2023-24 ஆம் ஆண்டின் கீழ் புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு 21, பகழமுடையான் தெரு, கனகராஜ் ஆரம்ப பள்ளி அருகில் 9 மீ மினி உயர்கோபுர மின்விளக்கு (LED) அமைத்தல் பணியை மேற்கொள்ள 10.07.2024-ல் வரப்பெற்றுள்ள கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
மதிப்பீட்டுத் தொகை ரூ.3.30 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>தமிழ்நாடு எண்டர்பிரைசஸ், 155/A, KLAS Nagar, புதுக்கோட்டை</td><td>275857/-</td></tr>
<tr><td>2</td><td>தாஜ் பேவ்ரிகேட்டர்ஸ், 4,5 சின்னப்ப நகர், பட்டுக்கோட்டை</td><td>281470/-</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட குறைவாக வழங்கியுள்ள தமிழ்நாடு எண்டர்பிரைசஸ், பட்டுக்கோட்டை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். (ந.க.எண்.242/2024/இ1)<br>
<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>503</td>
<td>
பொருள்.10<br>
நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2021-22 ஆம் ஆண்டின் கீழ் புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு 17, ஸ்டேட் பேங்க் எதிரில் உயர் கோபுர மின்விளக்கு (LED) அமைத்தல் பணியை மேற்கொள்ள 31.07.2024-ல் வரப்பெற்றுள்ள
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சம்
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>குமார் ஏஜென்சிஸ், மகாராஜா நகர், பாளையங் கோட்டை</td><td>857000/-</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ் , பாளையங்கோட் டை</td><td>829600/-</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட குறைவாக வழங்கியுள்ள ஸ்ரீகங்கா எலக்ட்ரிகல்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br><u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>504</td>
<td>பொருள்.11<br>புளியங்குடி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்.18, ரெங்க கருப்பன் தெரு கீழ் பகுதியில் உள்ள மினி பவர் பம்ப் மோட்டார் பழுதடைந்துள்ளது என நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் புகார் தெரிவித்ததன் பேரில் மேற்படி மினிபவர் பம்ப் மோட்டார் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் மேற்படி மின்மோட்டாரின் காயில் மற்றும் சாட்டர் தேய்ந்து பழுதடைந்துள்ளது. மேற்படி மின்மோட்டாரை சரி செய்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே புதிய 1.50 H.P. நீர்மூழ்கி மின்மோட்டார், கேபிள் மற்றும் புதிதாக 1000 லிட்டர் சின்டெக்ஸ் வாங்கி பொருத்துவதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்தை (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்ட து</td>
</tr>
<tr>
<td></td>
<td>505</td>
<td>பொருள்.12<br>புளியங்குடி நகராட்சியில் வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள குடிநீர் விநியோக குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் AC, PVC மற்றும் DI குழாய்களில் உடைப்பு மற்றும் அடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் செய்யும் போது அனைத்து தெருக்களிலும் குடிநீர் சீராக விழவில்லை. இதனால் பொதுமக்கள் இருந்து</td>
<td>அனுமதிக்கப்பட்ட து</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அடிக்கடி புகார் வந்தவண்ணன் உள்ளதால் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உடனடியாக பணிகளை மேற்கொள்ள தெரிவித்து வருகிறார்கள். மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தை (ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொண்ணூறாயிரம் மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 506 | **பொருள்.13**<br>புளியங்குடி நகராட்சியின் வார்டு எண்.01 முதல் 33 வரை உள்ள சிறுமின் விசைப்பம்பு மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் நகராட்சி அலுவலக கட்டிடங்கள், நகராட்சி பள்ளிகள், அங்கன்வாடிகள் மற்றும் பொது கழிப்பிடங்களில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் போர்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு பொது மக்களிடம் இருந்து அடிக்கடி புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. இந்நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் உடனடியாக பழுதுகளை சரி செய்ய தெரிவித்து வருகிறார்கள். மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தை (ஒன்பது இலட்சத்தி தொண்ணூறாயிரம்) குடிநீர் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்ட து |
| | 507 | **பொருள்.14**<br>அரசாணை (M.S) எண். 45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை: 12.04.2023 ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 அத்தியாயம் IX பகுதி I விதி எண்.289 ல் நகர எல்லைக்குள் தொழில் வத்தகம் மற்றும் வணிகம் செய்யும் எந்த ஒரு நிறுவனமும் ஆணையரால் வழங்கப்பட்ட தொழில் உரிமம் இன்றி தொழில் வர்த்தகம் மேற்கொள்ளக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின்படி தொழில் உரிமம் வழங்கிட விதிஎண் 289 பிரிவு (1), (2), (5) மற்றும் (7) ஷெட்யூல் I,II, III, மற்றும் IV ல் ஷெட்யூல் I, II மற்றும் III ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு ஒன்றிற்கான குறைந்த பட்ச, அதிக பட்ச கட்டணங்களின் அடிப்படையில் 3 | அனுமதிக்கப்பட்ட து |

ஆண்டுகளுக்கு தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தால் நிர்ணயிக்கப்படும் தொகையினை வசூல் செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2025 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்–(1) அட்டவணைகள் I,II,III–ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், புளியங்குடி நகர்மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1– இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும் சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் –17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும்

சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உரிய பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணபத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18– இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1)– இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணபிக்கவேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது , உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை I,II,1III, மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 ந் தேதி முதல் அமுலுக்கு வரும்.

குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.

**<u>அட்டவணை – 1</u>**

**<u>ஆண்டு கட்டணம்:</u>**

| **வரிசை எண்** | **வகைப்பாடு** | **குறைந்த பட்ச ஆண்டு கட்டணம் ரூ.** | **அதிகபட்ச ஆண்டு கட்டணம் ரூ.** |
|---|---|---|---|

| . | | | |
|---|---|---|---|
| 1. | குறுந்தொழில் நிறுவனங்கள் | 1500 | 3500 |
| 2. | சிறுதொழில் நிறுவனங்கள் | 3500 | 5000 |
| 3. | நடுத்தரதொழில் நிறுவனங்கள் | 7500 | 10000 |
| 4. | இதர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் | 10000 | 35000 |

**1.வர்த்தகம் மற்றும் வணிகநிறுவனங்களின் பட்டியல்**

| வ. எண் | வர்த்தகம் மற்றும் வணிக நிறுவனங்கள் | குறுந் தொழில் நிறுவனங்கள் | சிறு தொழில் நிறுவனங்கள் | நடுத் தர தொழில் நிறுவனங்கள் | இதர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 3 | அனைத்து வகையான மின்சார மற்றும் மின்னனு மற்றும் பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 4 | அனைத்து | 15 | 3500 | 7500 | 10000 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வகையான மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகள்உற்பத்தி | 00 | | | | |
| | | 5 | அனைத்துவகையான மின்சாரமோட்டார்கள் மற்றும் பம்புகள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 6 | கற்கள் வெட்டுதல் மற்றும் உடைத்தல் | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 7 | காகித பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 8 | அனைத்து வகையான உலோகங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 9 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 10 | அனைத்து வகையான மோட்டார் மற்றும் பம்பு உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 11 | அனைத்துவகையான தொழிற்சாலை இயந்திரங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 12 | மோட்டார்வாகன பாகங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 13 | அனைத்து<br>வகையான<br>கட்டுமானப்<br>பொருட்கள்<br>உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 14 | அனைத்து<br>வகையான<br>பொறியியல்<br>பணிகள் | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 15 | செங்கல்<br>சூளைகள் | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 16 | அனைத்துவ<br>கையான<br>தானியங்கி<br>உதிரிபாகங்க<br>ள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 17 | அனைத்து<br>வகையான<br>அழகுதன<br>பொருட்கள்<br>உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 18 | அனைத்து<br>வகையான<br>நாட்டு<br>மருந்துகள்,<br>அழகுசாதன<br>பொருட்கள்,<br>மூலிகை<br>பொருட்கள்<br>உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 19 | வெவ்வேறு<br>வகையான<br>உலோகப்<br>பொருட்களி<br>லிருந்து<br>கருவிகள்<br>மற்றும்<br>உபகரணங்க<br>ள்<br>தயாரித்தல்<br>(பேப்ரிகேஷ<br>ன்) | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 20 | துருப்பிடிக்<br>காத எஃகு<br>தொழில்<br>மற்றும்<br>பாலிசிங் | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 21 | அனைத்து | 15 | 3500 | 7500 | 10000 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வகையான இராசாயனங்கள் உற்பத்தி | 00 | | | | |
| | | 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 23 | அனைத்து வகையான துவைத்தல், சுத்தம் செய்யும் பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 25 | கொதிகலன் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 26 | குளிரூட்டும் இயந்திரம் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 28 | அனைத்து வகையான எழுது பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 30 | அனைத்துவகையான வீட்டு உபயோகப் பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 | |
| | | 31 | அனைத்து | 15 | 3500 | 7500 | 10000 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வகையான பூச்சிக்கொல்லி , இரசாயனங்கள் உற்பத்தி | 00 | | | | |
| | | 32 | பேட்டரிகள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 33 | மீன்பிடிவலைகள் மற்றும் கொசுவலைகள்உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 34 | தங்கம் மற்றும் வெள்ளி மற்றும் உலோக ஆபரணங்கள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 35 | இசைக்கருவிகள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 36 | துப்புரவு சாதனங்கள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 37 | சுண்ணாம்பு சூளை | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 38 | அனைத்து வகையான கயிறுநார் பொருட்கள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 39 | அனைத்து வகையான ஆடைகள்/ துணிகள்/ ஜவுளிகள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 40 | அனைத்து வகையான தோல் பொருட்கள் உற்பத்தி | 15 00 | 3500 | 7500 | 10000 | |
| | | 41 | அனைத்து வகையான மரம்/ பிளைவுட்/ | 15 00 | 3500 | 7500 | 10000 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சன்மைக்கா உற்பத்தி | | | | |
| 42 | அனைத்து வகையான ஹார்டுவேர்ஸ் பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 43 | அனைத்து வகையான விளையாட்டு சாதனங்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 44 | அனைத்து வகையான வேளாண்பணி பயன்பாட்டு பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 45 | அனைத்து வகையான சமையல் எண்ணெய் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 46 | பால்பொருட்கள் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 47 | தேயிலை உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 48 | காபி உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 49 | தேன் உற்பத்தி | 1500 | 3500 | 7500 | 10000 |
| 50 | பீடி தயாரிப்பு | 1500 | 3500 | 7500 | 10000 |
| 51 | நகராட்சியால் கருதப்படும் இதர உற்பத்தி இனங்கள் | 1500 | 3500 | 7500 | 10000 |

**அட்டவணை II**

**[See rules 289 (1),(2) and (5)]**

**1. பொருந்தும் தன்மை:**

(1) இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| | | அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.<br>**2.** பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:–<br>1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.<br>2. 2013–ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், வங்கிகள், நிதிநிறுவனங்கள்.<br>3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.<br>4. 1959–ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்<br>**5.** 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23).<br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் அட்டவணை II–இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட | |

அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

**ஆண்டு கட்டணம்**:

| வ எண். | வகைப்பாடு | குறைந்த பட்ச ஆண்டு கட்டணம் (ரூ) | அதிகபட்ச ஆண்டு கட்டணம் (ரூ). |
|---|---|---|---|
| 1. | கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் | 700 | 10000 |

**2.வர்த்தகம்மற்றும்வணிகநிறுவனங்களின்பட்டியல்:**

| வ. எண் | கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் விபரம் | சிறியது | இதர மற்றும் பெரியது |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (5) |
| 1 | நெகிழிப்பொருட்கள் இருப்பு வைத்தல் மற்றும் விற்பனை | 2000 | 2500 |
| 2 | தையற்பொருட்கள் இருப்பு வைத்தல் மற்றும் விற்பனை | 700 | 1000 |
| 3 | தையல் இயந்திரங்கள் இருப்புவைத்தல் மற்றும் விற்பனை | 700 | 1000 |
| 4 | கைவினைப் பொருட்கள்இருப்பு வைத்தல்மற்றும் விற்பனை | 700 | 1000 |
| 5 | மின்சாரம், மின்னனு மற்றும் கணிணி பொருட்கள் இருப்புவைத்தல் மற்றும் விற்பனை | 700 | 1000 |
| 6 | மின்சாரம் ,மின்னனு மற்றும் கணிணி பொருட்கள் பழுது பார்க்கும் மையங்கள் | 700 | 1000 |
| 7 | அனைத்து வகை | 700 | 1000 |

